**செய்தி வெளியீடு எண்: 396** **நாள்: 25.06.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.6.2017 அன்று தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் அமைந்துள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், 4 கோடியே 81 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாகக் கட்டடத்தின் முதல் தளம், மாணவர், மாணவியருக்கான விடுதிக் கட்டடங்களின் முதல் தளம், துணைவேந்தர், பதிவாளர், ஆசிரியர் மற்றும் அலுவலர் குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள். மேலும், 7 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மாணவ, மாணவியருக்கான கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடம் மற்றும் மாணவ, மாணவியருக்கான விடுதிகளின் இரண்டாம் தளக் கட்டடம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு சிறந்த பயிற்சி அளித்து, அவர்களை தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க செய்தல், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கங்களை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்ப்பவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், பன்னாட்டு தரத்தில் விளையாட்டு மைதானங்கள், உள் விளையாட்டு அரங்குகளை அமைத்தல், போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான முயற்சியால், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்தில், உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுகள் சார்ந்த படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளை சர்வதேச அளவில மேற்கொள்வதற்கு வசதியாக 125 ஏக்கர் நிலப்பரப்பில் 2005–ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக கட்டடத்தின் முதல் தளம், 1 கோடியே 37 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணைவேந்தர், பதிவாளர், ஆசிரியர் மற்றும் அலுவலர் குடியிருப்புகள், 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவருக்கான விடுதிக் கட்டடம், 72 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியருக்கான விடுதிக் கட்டடம், என மொத்தம் 4 கோடியே 81 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 4 கோடியே 67 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடம், 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாணவர்களுக்கான விடுதியின் இரண்டாம் தளக் கட்டடம், 1 கோடியே 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாணவியருக்கான விடுதியின் இரண்டாம் தளக் கட்டடம், என மொத்தம் 7 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்லைகக்கழகத்தின் பதிவாளர் முனைவர் த. ராதாகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 25.6.2017